முன்னாள் அமைச்சர் மறைந்த திருமதி புலவர் இந்திரகுமாரி அவர்களின் பெயரில் துவங்கப்பட்ட ஐ கன்வென்ஷன்ஸ் ஹாலின் (I Conventions) முதல் நிகழ்வாக முதல்வர் மு.க.ஸ்டாலின் – திருமதி துர்கா ஸ்டாலின் ஆகியோரின் 50வது திருமண நாளான நேற்று 50 தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தாருக்கு புடவை மற்றும் மதிய உணவு திருமதி லேகாசந்திரசேகர் வழங்கினார்.

திருப்பத்தூர் மாவட்டம்

ஆலங்காயம் மேற்கு ஒன்றியத்தில் சாலை அமைக்கும் பணி!

கதிர் ஆனந்த் எம்.பி. இன்று துவக்கி வைக்கிறார்!

திருப்பத்தூர், ஆக. 21- திருப்பத்தூர் மாவட்டம் ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் பி.எம்.ஜி.எஸ்.ஒய். திட்டத்தில் வழங்கப்பட்ட தார்ச் சாலை அமைக்கும் திட்டப் பணிகளில் கதிர் ஆனந்த் எம்.பி. கலந்து கொண்டு துவக்கி வைக்கிறார்.

இன்று (21.08.2024) காலை 9.45 மணி - பீமகுளம் ஊராட்சி மந்தாரக்குட்டை முதல் மலைரெட்டியூர் வரை ரூ.3.00 கோடி தார்ச் சாலை அமைக்கும் பணியையும், 'காலை 10.15 மணி - நிம்மியம்பட்டு ஊராட்சி சுண்ணாம்பு பள்ளம் முதல் கூவல் குட்டை காளான் வட்டம் வரை ரூபாய் 5.00 கோடி தார்ச் சாலை அமைக்கும் பணியையும்,

காலை 10.45 மணி - வடக்குப் பட்டு சாலை ஜமான் கொல்லை முதல் குண்டியம்மன் கோயில் வரை ரூபாய் 3.05 கோடி தார் சாலை அமைக்கும் பணியையும், கதிர் ஆனந்த் எம்.பி. துவக்கி வைக்கிறார்.

-கோட்டைப்பட்டினம், நிஷா மண்டபம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

முதலமைச்சர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி விழுப்புரம் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட ஊராட்சி அலுவலகத்தை திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சியர் சி.பழனி தலைமை தாங்கினார். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் வரவேற்றார். சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் இரா.இலட்சுமணன், அன்னியூர் அ.சிவா, மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் ஷீலா தேவி சேரன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்:

ஒன்றிய - நகர - பேரூர்களுக்கான பொது உறுப்பினர் கூட்டங்கள்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எஸ். ரகுபதி அறிக்கை!

புதுக்கோட்டை, ஆக.21- புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கடந்த 17.08.2024ம் தேதி அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் தலைவர் தளபதி ஆணைக்கிணங்க புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்களுக்கான பொது உறுப்பினர்கள் கூட்டம் முதற்கட்டமாக கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ளபடி நடைபெறும். பொது உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது

22.08.2024-காலை 11.30- அரிமளம் வடக்கு, அரிமளம் தெற்கு மற்றும் அரிமளம் பேரூர்-அரிமளம் CVR மண்டபம், 22.08.2024-மாலை4.30 - அறந்தாங்கி தெற்கு- நாகுடி ஸ்ரீராம் மண்டபம் 22.08.2024-மாலை 6.00- அறந்தாங்கி நகரம்-நூர் மஹால், 23.08.2024-மதியம் 12.00-பொன்னமராவதி வடக்கு, பொன்னமராவதி தெற்கு மற்றும் பொன்னமராவதி பேரூர்- பொன்னமராவதி மீனாட்சி மண்டபம், 23.08.2024- மாலை 4.00-திருமயம் வடக்கு, திருமயம் தெற்கு- திருமயம் AKP திருமண மஹால், 23.08.2024-மாலை 6.00 - அறந்தாங்கி கிழக்கு, அறந்தாங்கி மேற்கு-ஆவணத்தான்கோட்டை SPM மண்டபம்,24.08.2024-காலை 10.00-ஆவுடையார்கோவில் வடக்கு, ஆவுடையார்கோவில் தெற்கு-TRP திருமண மண்டபம்,25.08.2024-பிற்பகல்- ஆலங்குடி தொகுதி, 28.08.2024 -காலை 10.00 - மணமேல்குடி வடக்கு-வசந்த மண்டபம், 28.08.2024-நண்பகல் 12.00-மணமேல்குடி தெற்கு

ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கான

தமிழ்நாடு அரசின் திட்டம்!

உயர்நீதிமன்ற மதுரைக்கிளை பாராட்டு!

மதுரை,ஆக.21- ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கான தமிழ்நாடு அரசின் திட்டத்துக்கு உயர் நீதிமன்ற மதுரைக்கிளை பாராட்டு தெரிவித்துள்ளது. சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஆட் கொணர்வு மனு தாக்கல் செய்திருந்தார். அதில் 12ம் வகுப்பு படிக்கும் தனது மகள் கடந்த மாதம் முதல் காணவில்லை என்றும், காவல் நிலையத்தில் புகார் அளித்தும் இன்னும் கண்டறிய முடியவில்லை என்பதால் தனது மகளை கண்டுபிடித்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை நீதிபதிகள் சி.வி. கார்த்திகேயன், ஜெ.சத்திய நாராயண பிரசாத் ஆகியோர் முன் விசாரணைக்கு வந்தது. விசாரணையின் போது காணாமல் போனதாக கூறபட்ட மாணவியை கண்டுபிடித்து சிவகங்கை மாவட்ட காவல்துறையினர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். அப்போது, மாணவியிடம் விசாரணை செய்தபோது, தன்னை யாரும் கடத்தவில்லை என்றும், தான் தனது சக நண்பர்களுடன் தங்கி இருந்ததாகவும் கூறினார். மேலும் தான் தனது பெற்றோருடன் செல்ல விருப்பம் இல்லை என்றும், தனது பெற்றோரால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் கூறினார்.

இதனைத் தொடர்ந்து இந்த வழக்கில் அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் செந்தில் குமாரிடம், இந்த மாணவி மதுரையில் தங்கி கல்வி பயில உரிய ஏற்பாடு செய்ய நீதிபதிகள் உத்தரவு பிறப்பித்தார்கள். அதோடு மாணவியின் பாதுகாப்பு, கல்வி எந்த விதத்திலும் பாதிக்காத அளவில் இருக்க வேண்டுமென உத்தரவு பிறப்பித்தனர்.

இந்நிலையில் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது. விசாரணையின்போது அரசு குற்றவியல் வழக்கறிஞர் செந்தில்குமார் ஆஜராகி, மாணவி தற்போது மதுரையில் உள்ள அரசு குழந்தைகள் நலக் காப்பகம் சார்பில் தங்க வைக்கப்பட ஏற்பாடு செய்யபட்டுள்ளது என்றும், மதுரையில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளியில் தொடர்ந்து 12ம் வகுப்பு பயில ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்றும் அறிக்கை தாக்கல் செய்தார். இதனைத் தொடர்ந்து நீதிபதிகள், இந்த வழக்கில் மாணவிக்கு உடனடியாக பாதுகாப்பான இடமும் கல்வியும் ஏற்பாடு செய்த அரசின் குற்றவியல் வழக்கறிஞர் செந்தில்குமாருக்கு பாராட்டுகளை தெரிவித்தனர்.

மேலும் ஆதரவற்ற, பாதிக்கப்பட்ட பெண் குழந்தைகள் மாணவிகள் பயன்பெறும் வகையில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவை துறை பிரிவில் தமிழ்நாடு அரசு உணவு, சீருடை, கல்வி என அனைத்தும் வழங்கும் இந்த திட்டம் மிகவும் பாராட்டத்தக்க திட்டம் இதனால் இது போன்ற மாணவிகள் பெரும் பயன்பெறுவார்கள் என தமிழ்நாடு அரசுக்கு பாராட்டுகளை தெரிவித்தனர். தொடர்ந்து மாணவிக்கு கல்வி மற்றும் மனநலம் குறித்த ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்றும் மாணவியின் பெற்றோருக்கு உரிய சட்ட ஆலோசனைகளை வழங்க மீண்டும் என்றும் உத்தரவிட்ட நீதிபதிகள் ஆட்கொணர்வு மனுவை முடித்து வைத்துள்ளனர்.

வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

கதிர்ஆனந்த் எம்.பி.வாக்காளர்களுக்கு இன்று நன்றி தெரிவிக்கிறார்!

மதச்சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ள டி.எம்.கதிர் ஆனந்த் இன்று (21.08.2024)கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

திருப்பத்தூர் மாவட்டம் - ஆலங்காயம் மேற்கு ஒன்றியம்

வ.எண்	நேரம்	இடம்
1.	பகல் 12.30 மணி	வெலதிகாமணிபெண்டா
2.	பகல் 2.00 மணி	ஈச்சங்கால்
3.	பகல் 2.15 மணி	தேவஸ்தானம்
4.	பகல் 2.30 மணி	ஜாப்ராபாத்
5.	பகல் 2.45 மணி	மதனாஞ்சேரி
6.	பகல் 3.00 மணி	பள்ளிப்பட்டு
7.	மாலை 3.15 மணி	இளையநகரம்
8.	மாலை 3.30 மணி	கொல்லகுப்பம்
9.	மாலை 3.40 மணி	சம்மந்திகுப்பம்
10.	மாலை 4.00 மணி	கிரிசமுத்திரம்

தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலத்திற்கு உட்பட்ட 55வது வார்டில் சசிவரத நகரில் வசிக்கும் மக்களுக்கு வருவாய்த்துறை சார்பாக அடையாறு ஆற்றின் கரை ஓரமாக உள்ள 257 வீடுகளை காலி செய்ய கோரிய நோட்டீஸ் கொடுத்ததின் பேரில் அதை அறிந்த தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்,எல்,ஏ. நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். உடன் 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் மற்றும் மாமன்ற உறுப்பினர் பி.புகழேந்தி தாம்பரம் தாசில்தார் ராஜேந்திரன் பொதுப் பணித்துறை அதிகாரிகள் பொதுமக்கள் உடன் இருந்தனர்.

புதுக்கோட்டை – செட்டியார்பட்டியைச் சேர்ந்த

மாரிக்கண்ணு சாலை விபத்தில் பலி : குடும்பத்தினருக்கு நிதியுதவி!

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் வழங்கினார்!

புதுக்கோட்டை, ஆக.21- முதலமைச்சர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் வட்டம், வடவாளம், தெற்கு செட்டியாப்பட்டி, சொரியன் தெருவைச் சேர்ந்தவர், சமயபுரம் மாரியம்மன் கோவிலுக்கு பாதயாத்திரையாகச் சென்றபோது ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்த மாரிக்கண்ணு என்ப வரின் வாரிசுதாரரிடம், முதலமைச்சரின் பொது நிவாரண நிதி வழங்கிட உத்தரவிட்டதைத் தொடர்ந்து, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் , மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, தலைமையில் 16.08.2024 அன்று அவர்களது குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கான காசோலையினை வழங்கினார்.

புதுக்கோட்டை வட்டம், வடவாளம், சொரியன் தெருவைச் சேர்ந்த மாரிக்கண்ணு (வயது 46) க/பெ.ரெங்கசாமி என்பவர் கடந்த 07.08.2024 அன்று சமயபுரம் மாரியம்மன் கோவிலுக்கு பாதயாத்திரையாக சென்றபோது புதுக்கோட்டை மாவட்டம், அம்மாச்சத்திரம் அருகே இருசக்கர வாகனம் ஒன்று எதிர்பாராத விதமாக மோதிய விபத்தில் பலத்த காயமடைந்து சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மூளைச்சாவு அடைந்து சிகிச்சை பலனின்றி 08.08.2024 அன்று உயிரிழந்தார்.

மேலும், இந்த விபத்தில் மூளைச்சாவு ஏற்பட்டதைத் தொடர்ந்து உயிரிழந்த மாரிக்கண்ணு உடல் உறுப்புகள் அவரது குடும்பத்தினரின் சம்மதத்துடன் தானமாக வழங்கப்பட்டு, அவரது உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ.3 இலட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன்படி அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சாலை விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினரை 16.08.2024 அன்று நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, ரூ.3 இலட்சம் மதிப்பிலான முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கான காசோலையினை வாரிசுதாரரிடம் வழங்கினார்.

இந்நிகழ்வில், வட்டாட்சியர் பரணி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் மு.க.ராமகிருஷ்ணன், வடவாளம் ஒன்றியக்குழு உறுப்பினர் கலியமுத்து, நகர்மன்ற உறுப்பினர் எம்.எம். பாலு, தெற்கு செட்டியாப்பட்டி ஊராட்சிமன்றத் தலைவர் அருள் சிறுமலர் ஞானம், கிராம நிர்வாக அலுவலர் எடித்ரேனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

வேலூர் மாவட்ட தி.மு.க.

ஒன்றியம், நகரம், பேரூர் வாரியாக பொது உறுப்பினர் கூட்டங்கள்!

மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு

	அமைப்பு	நாள் மற்றும் நேரம்	நிகழ்விடம்
01	கணியம்பாடி தெற்கு ஒன்றியம் பென்னாத்தூர் பேரூர்	22-08-2024 காலை 10.00	AA.மஹால், சோழவரம்
02	வேலூர் ஒன்றியம்	22-08-2024 முற்பகல் 11-30	பேபி மஹால், மேல்மொனவூர், அப்துல்லாபுரம்
03	அணைக்கட்டு மத்திய ஒன்றியம்,	22-08-2024 பிற்பகல் 3.30	G.S. மஹால், அணைக்கட்டு
04	அணைக்கட்டு மேற்கு ஒன்றியம், ஒடுக்கத்தூர் பேரூர்	22-08-2024 மாலை 5.00	நவீன் . மஹால், ஒடுக்கத்தூர்
05	பேர்ணாம்பட்டு கிழக்கு ஒன்றியம்	23-08-2024 காலை 10.00	GSM. மஹால், TT. மோட்டூர், கமலாபுரம்
06	பேர்ணாம்பட்டு மேற்கு ஒன்றியம்	23-08-2024 முற்பகல் 11.00	BSR . மஹால்,, பங்களாமேடு, பேர்ணாம்பட்டு
07	குடியாத்தம் கிழக்கு ஒன்றியம்	23-08-2024 பிற்பகல் 3.30	VRM மஹால், நத்தம், குடியாத்தம்
08	குடியாத்தம் தெற்கு ஒன்றியம்	23-08-2024 மாலை 5.00	SSS திருமண மண்டபம், கருணீகசமுத்திரம், மேல்பட்டி சாலை
09	குடியாத்தம் நகரம்	23-08-2024 மாலை 6.00	ஹயக்ரீவர் மஹால், புதிய பேருந்து நிலையம் எதிரில், குடியாத்தம்
10	குடியாத்தம் மேற்கு ஒன்றியம்	24-08-2024 காலை 10.00	MK மேரேஜ் ஹால், சித்தூர் கேட், குடியாத்தம்
11	குடியாத்தம் வடக்கு ஒன்றியம்	24-08-2024 நன்பகல் 12.00	லக்ஷ்மி பொன்னுசாமி மஹால், காட்பாடி சாலை, ராஜாகோயில், குடியாத்தம்
12	கீ.வ.குப்பம் கிழக்கு ஒன்றியம்	27-08-2024 காலை 10.00	SRM மஹால், காட்பாடி சாலை, லத்தேரி
13	கீ.வ.குப்பம் மத்திய ஒன்றியம்	27-08-2024 முற்பகல் 11.30	சுசிலம்மாள் லோகநாதன் திருமண மண்டபம், காட்பாடி சாலை, வடுகன்தாங்கல்
14	கீ.வ.குப்பம் மேற்கு ஒன்றியம்	27-08-2024 பகல் 01.00	GVS மஹால், கீழ்ஆலத்தூர் மோட்டூர்

மேற்படி நிகழ்ச்சி நிரலின்படி நடைபெற உள்ள பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் அந்தந்த அமைப்பிற்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக்கழக நிர்வாகிகள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் பேரூர் சார்பு அணிகளின் நிர்வாகிகள், வார்டு, ஊராட்சி, உட்கிளை நிர்வாகிகள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள், கழக முன்னாள், இந்நாள் முன்னோடிகள் ஆகியோர் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.
செயலாளர்
வேலூர் மாவட்ட தி.மு.க.